## ஆய்வுச் சுருக்கம்

ஹட்டன் கல்வி வலயத் தோட்டப்புற தமிழ் பாடசாலைகளில் வெளிநாட்டில் தொழில்புரியும் பெற்றோரது பிள்ளைகளின் கல்வி விருத்தி எனும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது ஹட்டன் கல்வி வலயத்தில் தோட்டப்புறத் தமிழ் பாடசாலைகளில் வெளிநாட்டில் தொழில் புரியும் பெற்றோரது பிள்ளைகளின் கல்வி விருத்தி நிலைமைகளை இனங்காண்பதை பிரதான நோக்கமாகக் கொண்டது. தெரிவு செய்யப்பட்ட மாறிகளில் சாரா மாறியாக பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டில் வெளிநாட்டில் தொழில் புரியும் பெற்றோரின் அக்கறை அமைய, சார் மாறியாக வெளிநாட்டில் தொழில் புரியும் பெற்றோரது பிள்ளைகளின் கல்வி விருத்தி அமைகின்றது. ஹட்டன் கல்வி வலயத்தில் 2018 ஆம் ஆண்டில் 14 பாடசாலைகளில் தரம் 06 தொடக்கம் 11 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் வெளிநாட்டில் தொழில்புரியும் பெற்றோரது பிள்ளைகள் 128 பேரிடமும் அவர்களுக்கு கருப்பாடங்களை கற்பிக்கும் 86 ஆசிரியர்களிடமும் 14 அதிபர்களிடமும் வினாக்கொத்துகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. தொகைசார், பண்புசார் ஆய்வு அணுகுமுறைகள் இணைந்த வகையில் அளவை ஆய்வு வடிவத்தைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேரிக்கப்பட்ட தரவுகள் சதவீத அட்டவணைகளாக்கப்பட்டு பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்பட்டன. ஆய்வு முடிவுகளாக வெளிநாட்டில் தொழில்புரியும் பெற்றோரது பிள்ளைகளின் கல்வி விருத்தி நிலைமைகளில் பிள்ளைகள் வாழும் சூழல் தாக்கம் செலுத்துவதுடன் பெற்றோரை பிரிந்து வாழும் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள், உளவியல் தேவைகள் பூரணப்படுத்தப்படாமையால் அது அவர்களின் கல்வி விருத்தியில் தாக்கம் செலுத்துகிறது என்பது இனங்காணப்பட்டதுடன் இம்மாணவர்களுக்கு முறையான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படாமை பெற்றோரின் அரவணைப்பு கிடைக்காமை போன்ற காரணிகளால் இவர்களது கல்வி விருத்தி நிலைமைகள் பாதிக்கப்பட்டிருப்பதும் இனங்காணப்பட்டுள்ளதுடன் இம்மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் இனங்காணப்பட்டன. மாணவர் ஒழுக்கம் நெறி பிறழ்வுகள் போன்றனவும் இம்மாணவர்களின் கல்வி விருத்தியில் தாக்கம் செலுத்துவது இனங்காணப்பட்டது பாடசாலை சட்டத்திட்டங்களை நடைமுறைபடுத்தும் போது பாடசாலைக்கும் சமுகத்திற்கும் இடையிலான நட்புறவு பாதிக்கப்படல் பெறுபேறுகளை உயர்ந்த மட்டத்தில் தக்கவைத்து கொள்ள முடியாமை போன்ற நிர்வாகம் எதிர்கொள்ளும் சவால்களாக இனங்காணப்பட்டன

வெளிநாட்டில் தொழில்புரியும் பெற்றோரது பிள்ளைகளின் கல்வி விருத்திமட்டத்தினை உயர்த்துவதற்கான உரிய வழிகாட்டல்கள் இம்மாணவர்களின் கல்விமட்டத்தினை அதிகரிக்கும் என இவ்வாய்வு முன்மொழிகின்றது.



முதன்மைப் பதங்கள்

வெளிநாட்டில் தொழில் புரியும் பெற்றோரது பிள்ளைகள், கல்வி விருத்தி மட்டம், ஹட்டன் வலயம்

## Abstract

This study tries to identify the educational problems faced by the children whose parents are living abroad. Fourteen schools from the Hatton Educational Zone is selected to identify the sample. The sample consist of 14 principals, 86 teachers, and 128 Children whose parents working abroad. Within a framework of the survey research design, a mixed-method approach is selected. The collected data were analyzed using quantitative and qualitative data analysis techniques. The study revealed that the home environment influences the educational attainment of the children and these children face several challenges to fulfill the basic needs of their learning activities. Moreover, this study found that teachers and principals also face many challenges related to disciplinary issues and maintain good collaboration with their parents. This study suggested that several remedial actions need to be adapted to support to create a conducive learning environment at home and schools and must identify the strategies to maintain the collaboration with their parents and guardians.



Key Words

Children of parents working aboard, Plantation schools, Hatton Educational Zone